10வது ஆண்டில்

விளம்பரம்™
VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

# உலக தமிழோசை®
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 APRIL 01, 2000 பாலம் 07


- மனித உறவுகளின் மாற்றங்களிற்கு யார்பொறுப்பு? (பக். 5)
- வாகன வட்டிவீதம் குறையுமா? (பக். 3)
- கனடாவில் தமிழ் இளைஞர்கள்... உதைபந்தாட்டம் (பக். 6)
- சூரியனிற்கு அண்மையிலுள்ள கிரகம்? (பக்.9)
- ஐரோப்பாவின் நோயாளி நாடு? (பக். 7)
- மூட்டு வலியைத் தவிர்க்கலாமா! (பக். 4)
- சிவாஜி - சத்யஜித்ரே இருவருக்குமான தொடர்பு (பக். 7)
- இது உங்கள் தினம் (பக். 12)


RE/MAX
Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற
Raja M. Mahendran, P. Eng.
Sales Representative
MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB
(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!
Sabona & Gift
☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
Markham / Eglinton
(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)

## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- சிருஷ்யில் வேற்றுமை யிருப்பதனால் தான் வாழ்வு நடைபெறுகிறது; அழகு உருவெடுக்கிறது; பொருளைப் பற்றி கலை ஞானம் புலப்படுத்துகிறது.
- இயற்கை யென்னும் பொதுநூல் ஆயிரம் பேருக்கு ஆயிரம் விதமான பாடங்களைப் புகட்டுகிறது.
- உள்ளத்தைத் தூயதாக்கு வெறுப்புக்கு அதனுள் இடம் கொடுக்க வேண்டாம், உயிர்கள் அனைத்தையும் அன்பால் அணைத்துக் கொள்.
- உயிர்களை யெல்லாம் இறைவன் சொரூபமாகக் காண்பது ஒன்றே பந்த பாசங்களில் விருப்பத்திற்கு உற்ற உபாயம்.
- இவ்வுலகம் உனக்கு இன்பம் ஊட்ட வல்ல தென்றால் இது உன்னை அழச்செய்யவும் வல்லது என்பதை மறவாதே

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## பிரேசில் (BRAZIL)

வடஅமெரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா மூன்றும் சேர்ந்து மொத்தமாக 23 நாடுகள் அமைந்துள்ளது. வட அமெரிக்க நாடுகள் 3, மத்திய அமெரிக்க நாடுகள் 7, தென் அமெரிக்க நாடுகள் 13 ஆகும். தென் அமெரிக்காவில் பரப்பளவில் பெரிதாகவும், சனத்தொகையில் கூடியதாகவும் உலகச் சனத்தொகையில் 5 வது இடத்திலும் உலகப் பரப்பளவில் ஐந்தாவது பெரிய இடத்தையும் கொண்ட நாடாக பிரேசில் விளங்குகின்றது. பூகோள அமைப்பில் தென் அமெரிக்காவில் கிழக்கு பகுதியில் அத்திலாந்திச் சமுத்திரத்தை கிழக்கு எல்லையாக கொண்ட நாடு இதுவாகும். இக் கண்டத்தில் மொத்தமாக 13 நாடுகள் அமைந்திருந்தபோதும் 10 நாடுகள் பிரேசிலுடன் எல்லைத் தொடர்பைக் கொண்டுள்ளன.

உதைபந்தாட்டம் என்றதும் மக்கள் மத்தியில்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

அன்பிற்கு அம்மா, அறிவிற்கு அப்பா பொறுமைக்கு தர்மன், பேராசைக்கு ஹிட்லர். இப்படியல் தொடரலாம் இந்த வரிசையில் ஒன்று உண்மை, சத்தியத்திற்கு அரிச்சந்திரன். காலதேவதை அரிச்சந்திரனை பல கோணங்களிலிருந்தும் கொடுமைகளைக் கொடுத்த போதும் அரிச்சந்திரன் தனது சத்தியத்திலிருந்து தவறவில்லை. சந்தர்ப்பத்திற்கு பலர் அரிச்சந்திரன் போல வேடம் போடலாம். உண்மைக்கான கஷ்டங்கள் வரும் போது வேஷம் எல்லாம் போய் விடும். சின்னச் சின்ன விடயங்களிலே தங்கள் சுய உருவத்தைக் காட்டிக் கொள்வர். ஒருவன் நேர்மையானவன் என்றால் எப்பொழுதும் தனக்குத் தானே நேர்மையாக இருக்க வேண்டும். மற்றவரின் கஷ்டங்களை மதிக்க வேண்டும். எல்லோரிற்கும் தேவைகளும் கடமைகளும் இருக்கும் அவ்வாறு ஒவ்வொரு தேவைகள் இருக்கும் என்பதை நினைக்க மறுக்கும் மானிட ஜென்மம் முதலில் உனக்கு நேர்மையாக இரு அப்புறம் மற்றவர்களிற்கு நேர்மையாக இருக்க எத்தனிகலாம். சிறுசிறு விஷயங்களில் நேர்மையை வளர்க்கவேண்டும். அப்புறம் பெரிய விடயங்களில் நேர்மையைக் கடைப்பிடிக்கலாம். நாளை நமதே. சிந்திக்கவும்... செயல்படவும், வெற்றி நமதே!! -நெற்றிக்கண்ணன்

விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SATUARYDAY ✡ 12.00 PM


SINGAPORE CELLUAR
$25.00 + Taxes 200min/Month
PAGER $5.95/Month Unlimited
$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே
CANTEL
Bell Mobility
Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378
HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221


சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978



# அறிவும் ஆக்கமும் (54)

-விஜே குலத்துங்கம்

Computer துறையில் மிகவும் அதி வேகத்துடன் வளரும் ஒரு அம்சம்தான் internet ஆகும். தற்போது சிறுவர் தொடக்கம் முதியோர் வரையும் அனைவரும் உபயோகிக்கும் ஒரு சாதனமாக internet உள்ளது. இந்த நூற்றாண்டை Internet Century அதாவது internet நூற்றாண்டு எனக் கூறுகின்றார்கள். தற்போது தொலைபேசி இணைப்பு மூலமாகவோ, கேபிள் மூலமாகவோ internet வசதி பெறப்படுகின்றது. ஆனால் அசைந்து திரியும்போது பிரயாணம் செய்யும்போது இன்டர்நெற் இணைப்பு பெறமுடியாமல் இருக்கின்றது. தற்போது கம்பியில்லா இணைப்பு மூலம் அதாவது cellular phone வசதியுடன் இன்டர்நெற் இணைப்பு பெறும் முறையை Nokia, Qualcom, Cisco, Motorola போன்ற நிறுவனங்கள் முயன்று வருகின்றன. இப்படியான இன்டர்நெற் வசதிகள் மோட்டார் வண்டிகளிலும் அமைக்கப்படவிருக்கின்றன.

தற்போது நாம் தரவுகளையும், softwareகளையும் கொம்பியூட்டரின் hard drive இலேயே வைத்திருக்கின்றோம். எதிர்காலத்தில் softwareகளை சில internet web பக்கங்களில் இருந்து பெற்று உபயோகிக்கலாம். தரவுகளையும் எங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் பாதுகாப்பாக சேமித்து கொள்ளலாம். எனவே எதிர்காலத்தில் hard drive ன் தேவை இல்லாமலே வரக்கூடும். ஆனால் யார் இலவசமாக இந்த hard drive இடத்தையும், soft ware களையும் internet ல் உபயோகிக்க இடம் தருவார்கள் என கேள்வி எழக்கூடும். தற்போது விளம்பரம் செய்வதற்காக internet ஒரு சிறந்த இடமாக கருதப்படுகின்றது. எந்த web பக்கத்திற்கு அதிகம்பேர் போகின்றார்களோ, அந்தப் பக்கத்திற்கு அநேக விளம்பரங்கள் கிடைக்கும். இதே காரணத்தினால்தான், ஆரம்பத்தில் internet சேவைக்கு மாதாந்தக் கட்டணம் அறவிடப்பட்டது. தற்போது 3 web, excite, free web போன்ற web பக்கங்கள் இலவசமாக, internet சேவையை வழங்குகின்றன. All advantage போன்ற பக்கங்கள், அவர்களது view bar ஐ நீங்கள் பாவிக்கும்போது ஒரு மணித்தியாலத்திற்கு 50 சதவீதம் பணம் வழங்குகின்றார்கள். இதேபோல்தான் hot-mail, excite, yahoo போன்ற நிறுவனங்கள் இலவச E-mail சேவையை வழங்குகின்றன.

தற்போது இன்டர்நெற்றில் 800 மில்லியன் web பக்கங்கள் உள்ளன. ஒவ்வொரு செக்கனும் 38 புதிய web பக்க்ங்கள் உருவாக்கப்படுகின்றன. மற்றும் தற்போது internetன் மூலம் பங்குச் சந்தை வியாபாரம் நடைபெறுகின்றது. இது E-trade அல்லது E-commerce எனப்படும். இதன் மூலம் தற்போது 1.5 பில்லியன் சதுர அடி trading flow எனப்படும், பங்குச் சந்தை வியாபார தளம் மீதப்படுத்தப்பட்டுள்ளது. இதேபோல 2 பில்லியன் சதுர அடி காரியாலன இடமும் மீதப்படுத்தப்படுகின்றது. இந்த இடத்தில் பாவிக்கக்கூடிய மின்சாரம் ஏறக்குறைய 53 பில்லியன் கிலோவாற்று மணித்தியாளங்கள் சக்தி மீதமாகின்றது.

எதிர்காலத்தில் வீட்டிலுள்ள அனைத்து மின்உபகரணங்களிலும், computer chipம், internet இணைப்பும் கொடுக்கப்பட இருக்கின்றன. குளிர்சாதனப்பெட்டியில் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட பொருட்கள் வைக்கப்படும். பால் குறையும்போது பெட்டியில் உள்ள barcodeன் மூலம், குளிர்சாதனப் பெட்டியுடன் இணைககப்பட்ட internet மூலம் பால் கிடைக்கு order கொடுக்கப்பட, பால் வீட்டிற்கு விநியோகம் செய்யப்படும். இப்படியாக பல பொருட்கள் தீர்ந்து போக முதல், தன்னிச்சையாக internet மூலம் order செய்யப்படும். இதேபோல microwave oven உடனும் internet இணைக்கப்பட்டு, அதன் கதிலிலேயே internet மூலம் சமையல் செய்யும் முறையை பார்த்துக்கொண்டு, அதற்கேற்ப சமையல் செய்யலாம். Microwaveன் இயக்கம், internet மூலம் சரியான பதத்தில் மேற்கொள்ளப்படும்.

இதைவிட வீட்டில் உள்ள சகல மின்சார உபகரணங்களுக்கு internet இணைப்பு வசதி இருக்கும். அந்த உபகரணங்களில் ஏதாவது பிழை ஏற்பட்டால், இன்டர்நெற் மூலம் அவற்றை தயாரித்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டால், அவர்கள் internet இனூடாக, உபகரணங்களில் உள்ள பிழையை அறிந்து கொள்வார்கள். இதுன் மூலம் திருத்த வேலைகளும் நடைபெறலாம் அல்லது செய்ய வேண்டியதை அவர்கள் பாவனையாளருக்கு அறிவுறுத்துவார்கள்.

தற்போது computerன் அளவு மிகச் சிறியதாக வந்துவிட்டது, ஆனால் monitorகளின் அளவு பெரியதாகவே உள்ளது. தட்டைவடிவான monitor வந்தாலும் அவற்றை கொண்டு செல்வது கஸ்டம். இதற்காக தற்போது goggles போன்ற, நீந்தும்போது கண்ணுக்கு அணியும் கண்ணாடி போன்ற அமைப்பு ஒன்று Hewlett Packard நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு உள்ளது. இதை computer உடன் இணைத்து, கண்ணில் அணிந்து கொண்டால், திரையில் பார்ப்பதுபோன்று முழுவடிவமும் இதில் தெரியும்.
இக்கண்ணாடி வீடியோவுடன் இணைக்கப்பட்டும் படங்கள் பார்க்கலாம். தற்போது விமானப்பயணம் செய்யும் போது, திரையில் படம்பார்க்கும்போது, மற்றவர்களின் தலை மறைக்கலாம், பக்கமாக இருந்து பார்க்கவேண்டிய நிலை போன்றவை ஏற்படலாம். ஆனால் வருங்காலத்தில் earphone கொடுப்பதுபோல ஒவ்வொருவருக்கும் இக் கண்ணாடிகள் கொடுக்கப்படும். வேண்டாதவர்கள் நிம்மதியாக நித்திரை கொள்ளலாம். வேண்டியவர்கள் கண்ணாடி மூலம் படத்தை பார்த்துக் கொள்ளலாம்.


Internetல் பார்க்கும் விம்பங்கள் இருபரிமான வடிவங்களாகவே உள்ளது. ஆனால் சில web பக்கங்கள் 3-D அல்லது முப்பரிமாண வடிவங்களை காட்டுகின்றன. இதைப்பார்க்க இலவசமான ஒரு softwareஐ download செய்து கொள்ளலாம். ஆனால் விரைவில் அனைத்து பக்கங்களும், முப்பரிமான விம்பங்களை கொடுக்க இருக்கின்றன. அப்போது internet ஊடாக நாம் தொலைவிலுள்ள ஒருவருடன் கதைக்கும்போது நேராக முன்னால் இருந்து கதைப்பதுபோலஇருக்கும். அத்துடன் internet ஊடாக பொருட்களை வாங்கும்பொழுது அதை முப்பரிமாணத்தில் திருப்பி எல்லாப் பக்கமாகப் பார்த்து வாங்கக் கூடியதாக இருக்கும்.

தற்போது வேகமாக வளர்ந்து வரும் internetன் மூலம் பொருட்கள் வாங்கும் நிலை எதிர்காலத்தில் மிகவும் பிரபல்யமாக வர இருக்கின்றது. தற்போது கார் வாங்க வேண்டுமானால் பல dealerகளிடம் சென்று பார்வையிடவேண்டி உள்ளது. ஆனால் internet மூலம் அனைத்து நிறுவனங்களிலும் அனைத்து கார்களையும், உங்களின் விருப்பத்திற்கேற்ப வெளிக்காரின் நிறம், உள்ளே நிறம் போன்றவற்றை நீங்களாகவே தெரிவு செய்து எப்படி தோற்றமளிக்கும் என பார்வையிடலாம். எதிர்காலத்தில் விமானச் சீட்டுகளைக் கூட internet மூலம் பரவலாக வாங்கக் கூடியதாக இருக்கும். காப்புறுதி மற்றும் வங்கி அலுவல்கள் எல்லாம் முற்று முழுதாக internet மூலம் செய்யப்படும் காலமும் வரும். ஏற்கனவே சிறிய அளவில் மக்கள் இவற்றை பாவிக்கத் தொடங்கி விட்டார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது இது நிச்சியமாக இன்டர்நெற் நூற்றாண்டு என்றே சொல்லத் தூண்டுகின்றது

**"ஆறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் -61 scarfair pathwath, scarborough, ontario, M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு e-mail அனுப்பவும்.**


VIVEKA Printers



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்

80 Barbados Blvd., Unit #4, Scarborougjh, Ont.

செ. ஸ்ரீதரன் - (416) 410-6401



BANANA LEAF
Take-out & Catering

Everyday Special
ஆடு, மாடு, புரியாணி — Free வட்டிலப்பம் — $5.50

தினமும் ஸ்பெஷல்

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | LampRice | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030, (416) 704-8208 (24hrs.)

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple




## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING




*>Railing > Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## வாகனக் கடனுக்குரிய வட்டிவீதம் கூடுகிறதா?



நாங்கள் வங்கிகளில் வட்டிவீதம் கூடுவதை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது.. இதன் பாதிப்புகள் எல்லா பகுதிகளிலும் காணலாம். வீடுகளின் வட்டி வீதம் கூட கூடிக்கொண்டே போவதைக் பார்க்க முடிகிறது. தற்போது சில மாதங்களாக வாகனக்கடன்களின் வட்டி வீதங்களும் கூடுகிறதே தவிர குறைந்த பாடில்லை.

இந்நிலையில் சில வாகனத்தயாரிப்பாளர்களால் எப்படி குறைந்த வட்டி வீதத்திற்கு வாகனக்கடன்களை கொடுக்க முடிகிறது என்பதை யோசித்துப்பார்த்தால் சில விடயங்களை உணரக்கூடியதாக உள்ளது. அதாவது அவர்களின் வாகனங்கள் விற்பனை குறைவாக உள்ளதால் வாகனவிற்பனையைக் கூட்டுவதற்காக அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டியவர்கள் ஆகிறீர்கள். தங்கள் பொருளை உங்களிடம் கொடுத்துவிட்டு மாதாமாதம் அதன் பெறுமதியை உங்களிடம் அறவிடுகிறார்கள். இது பொருள் வாங்குபவர்களை கவரும் ஒரு செயலாகும். இந்த விளம்பரங்களை கண்டு ஏமாறாமல் எந்த வாகனம் சிறந்தது என்பதை கண்டறிந்து அதைவாங்குவது சிறந்தது. நீங்கள் விரும்பும் வாகனத்தின் வட்டி வீதம் கூடுதலாக இருந்தால், உங்கள் வங்கியை அணுகிப்பாருங்கள். உங்களுக்கும் உங்கள் வங்கிக்கும் நல்ல தொடர்பு இருந்தால் மிகவும் குறைவான வட்டியைப்பெறமுடியும்.

*மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** Cell (416) 704 -1179*


## நியூ மிலேனியத்தில்
## ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**


**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough



# கலைமகள்
# புத்தக நிலையம்

- *சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- *தமிழ்ப் புத்தகங்கள்
- *கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- *இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- *குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- *CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- *கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

**துரித பணமாற்றுச் சேவை**

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494



# ஆரோக்கிய வாழ்வு (54)

N. செல்வசோதி

## மூட்டு வலியை முடிவுக்கு கொண்டுவர

உலகின் குளிர் வலயத்திற்குள்ளிருக்கும் இந்த நாட்டில் 40 வயதிற்கு மேற்பட்டவர்களில் 80 சதவீதமானோருக்கு எலும்புகளின் மூட்டுப் பகுதியில் வலியினை தூண்டிவிட்டு எளிதாக மனிதனுக்குத் துன்பத்தைத் தரக்கூடியதாக மூட்டு வலி விளங்குகிறது. அத்துடன் குளிர் காலத்தில் இதன் கொடூரம் அதிகமாகும்.

### மூட்டு வலி பாதித்தல்

மனிதனின் உடலில் எங்கெல்லாம் மூட்டுப்பகுதிகள் இருக்கின்றதோ அங்கெல்லாம் மூட்டுகள் பாதிப்புக்கு உள்ளாகும்போது வாயுக்களானது மூட்டுப் பகுதியில் அதிகம் தங்கும்போது அவைகள் பாதிப்புக்கு உள்ளாகி மூட்டு வலியைத் தோற்றுவித்து மனிதனுக்குத் துன்பத்தைத் தருகின்றன.

### மூட்டுவலி ஏற்படும் இடங்கள்

(1) தோள்பட்டை மூட்டுப்பகுதி
(2) முள்ளந்தண்டின் மூட்டுப்பகுதி
(3) முளங்கால் மூட்டுப்பகுதி
(4) முளங்கை மூட்டு
(5) கைவிரல் மூட்டுகள், கால்விரல் மூட்டுகள்
(6) இடுப்பு மூட்டுப்பகுதி
(7) கழுத்துப் பகுதி
(8) கணுக்கால் மூட்டு, மணிக்கட்டு மூட்டுப்பகுதி இதுபோன்று இன்னும் பல இடங்களில் இந்த மூட்டு வலி உருவாகலாம்.

### மூட்டுவலிக்கான காரணங்கள்

(1) சவ்வுப் பகுதிகள் பாதிப்படையும் போது மூட்டுவலி ஏற்படுகின்றன.
(2) இடுப்புவலி ஏற்படும்போது மூட்டுப்பகுதிகள் பாதிப்படைந்து மூட்டுவலி ஏற்படுகின்றது.
(3) சதைகள் சவ்வுகள் சுரக்கும் நாரானது மூட்டுப்பகுதிகளைப் பாதிக்கலாம்
(4) உடல் எடையானது வயதிற்கும் உயரத்திற்கும் தக்கபடி இல்லாவிடின் மூட்டுவலி ஏற்படலாம்
(5) எலும்புகள் பாதிக்கப்பட்டால் மூட்டுவலி உருவாகும்.
(6) பரம்பரை பரம்பரையாகவும் மூட்டுவலி ஏற்பட வாய்ப்புண்டு
(7) தோல் வியாதி காரணமாகவும் மூட்டுவலி ஏற்படலாம்
(8) முதுகுப்பகுதி பாதிப்புக்கு உள்ளாகும்போது மூட்டுவலி தோன்றலாம்

இதுபோன்று இன்னும் பல வழிகளில் மூட்டுவலி உருவாகின்றது.

### மூட்டுவலிக்கான பாதுகாப்பு முறை

(1) உடல் குண்டாகாமல் பார்க்கவேண்டும்
(2) எல்லா நேரமும் அடிக்கடி உணவு உண்ணலாகாது
(3) உடல் உழைப்பு அவசியம் தேவை
(4) சாப்பிட்ட உடனே தூங்கக்கூடாது
(5) அதிகமான குளிர்படாது உடலை பாதுகாக்க வேண்டும்
(6) பெண்களுக்கு மாதவிடாய் குறைந்து வருவதனால் உடல் பருமனடைய வாய்ப்புண்டு. இதுவும் மூட்டு வலிக்கு ஒரு காரணமாக அமைந்து விடாது உடலைப் பாதுகாக்கவும்

### யோக சிகிச்சைமுறை

மூட்டு வலியின் தீவிரத் தன்மையால் அவதிப்படுபவர்கள் அறுவை சிகிச்சை செய்தால் நிரந்தரமாக பக்க விளைவுக்கு ஆளாக நேரிடும். இதை விடுத்து "ஹேமியோபதி" முறைமூலம் சிகிச்சை செய்து வந்தால் சிறந்த பலன் கிடைக்கும்

மூட்டு வலியை வாழ்நாளில் விரட்டியடிக்கும் ஒரு அற்புதமான பயிற்சிமுறை யோகாசனம்தான் என்றால் மிகையாகாது. இந்த யோகப்பயிற்சியில் ஒரு குறிப்பிட்ட சில ஆசனங்களையாவது தினமும் குறைந்தது 20 நிமிடமாவது ஒதுக்கி பயிற்சி செய்து வரும்போது அதன் பலனை அனுபவத்தில் அறியலாம்.

உடலில் எப்பகுதியில் மூட்டுவலி உள்ளதோ அந்தப்பகுதியைத் தாக்கக்கூடிய சில ஆசனங்களான சர்வாங்காசனம், சிரசாசனம், பட்சிமொத்தாசனம், தனுராசனம், ஹலாசனம் போன்றவைகளை தினமும் செய்துவருபவர்களுக்கு மூட்டுவலி உருவாக வாய்ப்பில்லை.

### உணவு முறை

மூட்டுவலி நோயாளிகளுக்கு உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். கூடியமட்டில் இயற்கை உணவு வகைகளையும் வாயுத் தொல்லைகள் உருவாகாத எளிதில் ஜீரணிக்கக்கூடிய உணவுவகைகளை அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டியதோடு மலச்சிக்கல் உருவாகாது பார்த்துக்கொள்வது அவசியம்.


Neelam SILK
நீலம் சில்க்

2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



புதிய வெளியீடுகள்

மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

'நீலம் சில்க்'

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)

CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484

கனடாவில் முதன்முதலில் தலைவாழை விருந்து படைத்தவர்கள்




கிராமத்து விருந்து

RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.

603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

TAKEOUT ONLY

சிக்கன் அல்லது பீவ்(Beef) முஸ்லிம் ஸ்ரைல் பிரியாணி, தலை வாழையிலையில் ஆக $5.99 மட்டுமே



மட்டக்களப்புக்கு பணம் அனுப்ப

மட்டக்களப்புக்கு 24 மணி நேரத்தில் பணம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும். புளியந்தீவு, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு டவுண் அழைக்கவும் ஜோசப் (416) 266-4240

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்பு கணித்தல்
- பலன் பார்த்தல்
- எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்



☎: 299-8361

ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்...

## உறவுகள்



பிறப்பு முதல் இறப்புவரை மனிதனை உறவுமுறைகள் தொடர்ந்து கொண்டே வருகின்றது இந்த உறவுகள் அமையும் வகையில் இருந்தே வாழ்க்கையும் இன்பமாகவோ, துன்பமாகவோ அமைகின்றது. தாய், தந்தை தரும் அன்பும், பாசமும் ஒரு நல்ல மனிதனை உருவாக்குகின்றது. தாய், தந்தையரின் நல்ல நடத்தைகளையும், பிழையான நடத்தைகளையும் கற்றுக் கொண்டு தமது வாழ்கையையும் அதே வகையில் தொடர்கின்றான் மனிதன்.

இந்த உலகில் முதன்மையான மதிப்பை பெறும் உறவு தாய் ஆகும். ஒரு பிள்ளையை இந்த மண்ணில் நல்ல முறையில் வளர்த்து எடுப்பதற்கு அவள்படும் துன்பங்களும், கஸ்டங்களுமே அந்த முதன்மை ஸ்தானத்தை தாயிற்கு பெற்றுக் கொடுக்கின்றது. தன்னலமற்ற சேவையால் கிடைக்கும் அந்த மதிப்பை பெறும் தாய் எந்த வகையிலும் அதற்கு தகுதியானவளே. ஆனால் எல்லா தாய்மார்களுமே அந்த மதிப்புக்கும் அன்புக்கும் உரியவர்களா என்று எண்ணும்போது சந்தேகமே பதிலாக கிடைக்கின்றது.

சுயநலமும், பொறாமையும் கொண்டவர்களே பொதுவாக மனிதத்தன்மை அற்றவர்கள் ஆகின்றார்கள். தான்மட்டுமே சந்தோசமாக வாழவேண்டும் என்று நடப்பவர்களும் மற்றவர்களின் சந்தோசத்தை கண்டு பொறாமைப் படுபவர்களுமே இந்த மண்ணில் வரும் அனர்த்தங்கள் விளைய காரணமாக இருக்கின்றனர். யார் எக்கேடு கெட்டால் என்ன என்னுடைய தேவைகளை மட்டும் பார்த்துக்கொண்டால் போதும் என்ற எண்ணமுடையவர்கள் தமது எண்ணங்களும் செயல்களும் பிழையானவை என்று தெரிந்தும் தம்மை திருத்திக் கொள்ள முயல்வதில்லை. காரணம் தம்மீது அன்பும் பாசமும் கொண்ட தாய், தந்தையர்கள் கூட சுயநலத்துடனும் பொறாமை உணர்வுகளுடனும் இருந்ததைக் கண்டு அதை கற்றுக்கொண்டவர்கள் அதில் தவறு ஒன்றும் இல்லை என்பதாக கருதிக்கொண்டு அவ்வழியில் செல்லுகின்றனர். தாம் பெற்ற பிள்ளைகளையே பாராபட்சமாக வித்தியாசமாக நடத்தும் ஒரு சில தாய் தந்தையரின் பிள்ளைகள் வளர்ந்ததும் முதலில் தமது சகோதரர்களை பெரும் கஸ்டங்களுக்கு உள்ளாக்குவது முதலாக தாம் பெற்ற பிள்ளைகளையும் பாராபட்சமாக நடத்துகின்றனர். இதனால் உறவுகள் முறிகின்றன.

பிறந்த மண்ணில் குடும்பம் என்று கட்டுக்கோப்பாக இயன்றவரை ஒற்றுமையாக வாழ்ந்தவர்கள் எல்லாம் புலம் பெயர்ந்து இந்த மண்ணிற்கு வந்த உடன் போட்டி பொறாமைகளால் சகோதர பாசங்களையும், சொந்த பந்தங்களையும் மறந்து போகிறார்கள். இயன்றவரை மற்றவர்களைபற்றி அவதூறு கதைப்பதிலேயே காலம் கழிக்கின்றனர். இனத்துக்கு இனம் நிற, உருவ ஒற்றுமை உள்ள நாட்டிலேயே உண்டான இனக்கலவரம் எந்த அளவிற்கு அழிவை உண்டாக்கி உள்ளது என்பதற்கு நாமே நல்ல உதாரணம். ஒற்றுமைஇன்மை, இந்த மண்ணில் மற்றய இனத்தவர்களிடம் இருந்து எம்மை பாதுகாக்க உதவாது என்பதை மறந்து விடக்கூடாது.

சிந்தனை தொடரும் - - -

பரம் G. ஒரு சாதாரண மனிதன்


11 வருடங்களாக தமிழர் மத்தியில்

# யோகாஸ்

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 106

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | 3 |
| | ■ | ■ | ■ | | ■ | ■ | |
| 5 | ■ | | ■ | 4 | | | |
| ■ | | | ■ | | ■ | ■ | |
| 8 | ■ | ■ | | 6 | 7 | | 8 |
| 9 | | 9 | ■ | ■ | 10 | 11 | ■ |
| | ■ | 12 | | ■ | | ■ | |
| | ■ | | ■ | ■ | | | 14 |

**இடமிருந்து - வலம்**

1. ஆறுசுவைகளில் ஒன்று
4. வழி (வல-இட)
5. 90 நிமிடங்களைக் குறிக்கும் தமிழ் காலஅளவு
7. கல்
8. இச்செடியில் இருந்து போதை மருந்து தயாரிக்கப்படும் (வல - இட)
9. ஆண் பூனை
10. சிறிய தாய்
11. மரங்களின் இனப்பெருக்கத்திற்கு உதவும் பூவின் பகுதி

**மேலிருந்து கீழ்**

2. நூல்
3. தண்டாயுதம்
4. கல்வித்திறம்

5. நவமணிகளில் ஒன்று (கீழ் - மேல்)
6. அழை
8. தமிழ் பாக்களில் ஒருவகை
11. போர் வீரன் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் APRIL 27, 2000க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப | ப் | ப | ட | ம் | ■ | ழை | இ |
| ர் | ■ | ந் | ■ | ர | ■ | ■ | று |
| வ | ■ | த | ■ | கா | ர | ண | ம் |
| த | ண | ல் | ■ | டி | ■ | ■ | பூ |
| ம் | ■ | ■ | ம் | க | மு | றை | து |
| ■ | சி | பா | ■ | ■ | க | ■ | ■ |
| சு | ■ | து | லா | ■ | ப் | ■ | றி |
| தூ | ரி | கை | ■ | ■ | பு | ப் | உ |

**#105இல் வெற்றி பெற்றோர்**

1)Kanagaratnam, Scarborough, Ont.
2.V. Teva, Mississauga Ont.


*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*

EZ DRIVING SCHOOL



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்

*JEYAKUMAR* ✆ (416) 283-4100


Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

YARL WINDOW COVERING

1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



*இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்*

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE

ரதீக்கா நகை மாளிகை

- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது,. எங்கள் விருப்பமோ இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, எங்கள் விருப்பமோ ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
- உங்கள் விருப்பமோ இந்த நகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, எங்கள் விருப்பமோ ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமையுடன் சொல்வது
- தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை அலுவலைப்பார்ப்பம் என்று அலைய வேண்டாம். ரதீக்கா நகைமாளிகையும் மஞ்சுளா பஷனும் ஒரே இடத்தில்.
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

ரதீக்காவின் புதிய விலாசம்

RATHICKA JEWELLERY

5635 Finch Ave. East, Unit 3, (Finch and Tapscott)
Scarborough, Ontario, M1B 5K9, Canada

Tel: (416) 299-1343

# விளையாட்டுத் தகவல்கள் (50)

-எஸ். கணேஸ்-



(ஒன்ராரியோ நடுவர் சம்மேளனத்தின் பொதுச் செயளாலரும், நடுவர்களின் Instructor/Assessor ஆக கடமையாற்றும் திரு எஸ் **கணேஷ்** அவர்களினால் இவ் ஆய்வுக்கட்டுரை இங்கு தரப்படுகின்றது.)

## கனடாவில் உதைபந்தாட்டத்தில் எமது இளைஞர்களின் ஏதிர்காலம்!! முன்னடைவா?? அல்லது பின்னடைவா??

கடந்த பெப்பிரவரி மாதம் Toronto City Hall இல் நடைபெற்ற தமிழர் தகவல் 10வது வருட ஆண்டு மலரில் வெளியிடப்பட்ட இவ் ஆய்வுக்கட்டுரையை உதைபந்தாட்டத்தில் எமது இளைஞர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு மீள்பிரதியாக்கம் செய்து இங்கு தருகின்றேன்.

வியைாட்டுத்துறை ஒரு சமுதாய வாழ்வில் பெரும் சீர்திருத்தங்களை ஏற்படுத்தவல்லது. புலம் பெயர்ந்த நாடுகளில் விளையாட்டு (sports) எமது இளைஞர்களின் புரிந்துணர்விற்கு ஒரு வடிகாலாக உள்ளது என்றால் மிகையாகாது. இன்று பலவகைப்பட்ட விளையாட்டுத்துறைகளில் எமது தமிழ் வீரர்கள் தமது பிறந்தகத்தின் புகழையும் புகுந்தகத்தின் புகழையும் எடுத்தியம்பி வருகின்றனர்.

இன்று இங்கு ரொறன்ரோவில் பல சங்கங்கள் வெவ்வேறு துறைகளில் இருந்தாலும் எமது இளம் சந்ததியினரை அதிக அளவில் ஒன்று சேர்ப்பது கனேடிய உதைபந்தாட்ட சங்கமேயாகும். எமது தமிழர் சமூகத்தில் உதைபந்தாட்டம் ஒரு புகழ்பெற்ற ஒரு விளையாட்டாகும். ஒவ்வொரு கிழமையும் இளைஞர்கள், பார்வையாளர்கள், ரசிகர்கள் என பல வகை பட்டவர்களையும் ஆயிரக்கணக்கில் ரொறன்ரோவில் ஒன்று சேர்ப்பது உதைபந்தாட்டமே ஆகும். இன்று ரொறன்ரோவில் எமது சமுதாயத்தில் முதியவர்களிலும் பார்க்க அதிக அளவு காணப்படுவது இளைய தலைமுறையே ஆகும். இவ் இளைய தலைமுறை எமது சமுதாயத்தின் மூல கருக்கள் ஆகும். இவர்களை நன்நெறி படுத்துவது மற்றைய துறைகளிலும் பார்க்க விளையாட்டு துறைகள் மூலமே என்பது கண்கூடு.

ஒரு sportsmen தன்னுடைய வில்ளையாட்டு அனுபவத்தின் மூலம் தனக்கு என்று ஒரு ஒழுக்கத்தையும் கட்டுக்கோப்பையும் தானாகவே வளர்த்துக்கொள்கிறான்.

இவ்வகையான கட்டுக்கோப்பையும் ஒழுக்கத்தையும் வளர்த்துக்கொள்வதன் மூலம் தனது கல்வி அறிவையும், தேக ஆரோக்கியத்தையும் மிகவும் சுலபமாக மற்றவர்களிலும் பார்க்க சிறப்பாக வளர்த்துக்கொள்கின்றான். இதனால் பல நோய் நொடிகளிலும் இருந்தும் கூட பலவயதினராலும் தப்பித்துக்கொள்ள முடிகின்றது.

ஆகவே சமூகத்தில் ஒரு விளையாட்டு வீரன் தன்னை வளர்த்துக் கொள்வதன் மூலம் எமது சமூகத்திற்கும் பெருமை தேடி தருகின்றான்.

ரொறன்ரோவில் மற்றைய விளையாட்டுத்துறைகளுடன் ஒப்பிடும்போது உதைபந்தாட்டத்தில் அதிக அளவு ரசிகர்களையும் அதிக அளவு கழகங்களையும், வீரர்களையும் இங்கு காணலாம். ஆனால் எமது உதைபந்தாட்ட வீரர்களின் எதிர்காலத்தை நோக்கும் போது இதில் எந்த அளவு முன்னடைவோ அல்லது முன் ஏற்பாடோ காணமுடியாதவாறு உள்ளது. இதற்கு காரணம் யாது என்பதை இங்கு பார்ப்போம்.

பின்னடைவுக்கு காரணமாயிருக்கும் காரணங்களை ஆராய முன்பு எமது வீரர்களின் முன்னேற்றங்களை முதலில் பார்ப்போம்.

கடந்த பதின்னான்கு வருடங்களாக எம்மவர் மத்தியில் ரொறன்ரோவில் பல உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. முதன்முதலில் 1992ம் ஆண்டு பதின்எட்டு கழகங்கள் ஒன்று சேர்ந்து இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தை அமைத்தனர். இதன் யாப்பு விதிகளுக்கு அமைய ஆட்டங்கள் யாவும் திறமையாக நடைபெற்று 1996ம் ஆண்டு கனேடிய தமிழர் உதைபந்தாட்ட சங்கம் என பெயர் மாற்றப்பட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ரொறன்ரோவில் உதைபந்தாட்டம் என்றால் "சண்டை சச்சரவு" என்ற நிலமை மாறி மிகவும் அமைதியாகவும் ஒழுங்காகவும் தற்போது போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இது இவ் சங்கத்தின் முயர்ச்சிகளுக்கு கிடைத்த பெரும் வெற்றி என்றே கருதவேண்டும்.

இதில் முக்கியமாக ஒரு உதாரணத்தை குறிப்பிட வேண்டும். ஏனெனில் இவ் உதைபந்தாட்டம் எவ்வளவு தூரம் எமது சமூகத்தில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை 1995ம, 1996ம் ஆண்டுகளில் உதைபந்தாட்டங்களில் எமது இளைஞர்களின் வன்செயல்கள் காரணமாக இவ்விரண்டு ஆண்டும் போட்டிகள் திறம்பட நடைபெறவில்லை. இவ்விரு ஆண்டு பகுதிகளிலேயே எமது இளம் சமுதாயத்தின் மத்தியில் குற்றவியல் சம்பவங்கள் அதிகரித்து காணப்பட்டன. உதைபந்தாட்டப் போட்டிகள் ஒழுங்காக நடைபெறும் போது இவ் குற்றவியல் சம்பவங்கள் குறைந்தே காணப்பட்டன. காரணம் யாதெனில் கிழமை நாட்களில் பாடசாலைக்கு பின்பு அல்லது வேலை தளத்தில் இருந்து வந்தவுடன் இளைஞர்கள் தத்தமது கழகங்களில் உதைபந்தாட்ட பயிர்ச்சிகளில் (practice) கலந்து கொள்கிறார்கள். வார இறுதி நாட்களில் சுற்று போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள். ஆதலால் இவர்களின் பொழுதுபோக்கு நேரங்கள் விளையாட்டுக்கு செலவிடப்படுகின்றன. இதனால் இவர்கள் பலவிதமான பிரச்சினைகளிலோ அல்லது வன்முறை சம்பவங்களிலோ அக்கறை காட்டுவதற்கு நேரம் கிடையாது. அதுமட்டுமல்லாமல் இவ்வகையான பிரச்சினையில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்கு இவர்களுக்கு தேவையான பக்குவமும் விளையாட்டு மூலம் கிடைக்கின்றது.

சில வருடங்களுக்கு முன்பு Red Cross அமைப்பு ரொறன்ரோவில் பல இனத்தவர்களின் சார்பாக நடைபெற்ற சுற்றுபோட்டிகளில் discipline விருது தமிழர் அணிக்கு கிடைக்கப்பெற்றது. 1997ம் ஆண்டு T&D பிரிவில் எமது United தமிழர் அணி runners-up விருதை பெற்றுக்கொண்டது. 1998ம் ஆண்டில் தமிழர் கழகமான ஸ்காபுரோ றேஞ்ர்ஸ் கழகம் (Scarborough Rangers) T&D Multi பிரிவில் runners-up விருதை பெற்றுக்கொண்டது. 1999ம் ஆண்டு சகல கழகங்களிலும் இருந்து ஒன்று திரட்டிய வீரர்களை கொண்டு முதன்முதலில் Indoor Soccer (உள்ளக அரங்கு) ஆட்டங்களில் வேறு இன கழகங்களுடன் தமிழர் அணி மோதி league இன் Champion விருதையும் தட்டிசென்றது. இதற்கு மேலும் சிகரம் வைக்குமாற்போல் league இன் முதல் இரண்டு இடங்களையும் (அதிகூடிய கோல்களை போட்டவர்கள்) இரு தமிழ்வீரர்களே பெற்றுக் கொண்டனர். மில்லனியம் வருடத்தில் எமது தமிழர் அணி Indoor இலும், Outdoor இலும் மேல் பிரிவுகளுக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளது. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதை போல் எமது இளைஞர்கள் ஒற்றுமையாக ஒன்று திரண்டால் யாருமே எம்மை அசைக்க முடியாது என்பதை நிரூபித்துள்ளார்கள்.

அடுத்து பின்னடைவிற்கான காரணங்களை பார்ப்போம். இவ்வளவு சாதனைகளையும் நிகழ்த்தியும் எமது தமிழ் சமூகத்தில் இருந்து ஒரு தமிழ் வீரன்தானும் கனேடிய தேசிய அணிக்கோ அல்லது மாகாண அணிக்கோ பங்கு பெறுவதற்கு தகுதிபெறவில்லை. இதற்கு காரணம் எம் இளைஞர்களிற்கிடையிலான சுற்று போட்டிகள் அதிகரித்து காணப்படுவதே ஆகம்.

அத்துடன் இப்போட்டிகள் 7 பேர் கொண்ட 9 பேர் கொண்ட அடிப்படையில் நடாத்தப்படுவதே ஆகம். ஏமது வீரர்கள் கனேடிய மண்ணில் இனம் காணப்படவேண்டுமேயானால் இவ் 7பேர் கொண்ட போட்டிகள் நிற்பாட்டப்பட்டு 11பேர் கொண்ட போட்டிகளை அதிகரிக்க செய்தல் வேண்டும். அத்துடன் mens சுற்றுபோட்டிகள் நடைபெறுவதுடன் நில்லாமல் ஒவ்வொரு வயதுகுட்பட்ட (under - 15, under - 17 & 19) ஆகிய பிரிவுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு வருடமும் கனேடிய league இல் பல வயதுக்குட்பட்ட பிரிவுகளை விளையாட அனுப்பப்படல் வேண்டும். Youth league/Toronto District League ஆகியவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கழகங்கள் பங்குபெறல் வேண்டும். இதன் மூலமே எமது வீரர்கள் கனேடிய சமுதாயத்தினால் அடையாளம் காணப்படமுடியும்.

இங்கு எவ்வளவோ திறமையான தமிழ் வீரர்கள் இருந்தும் அவர்களுக்கு போதிய தகவல்கள் தரப்படாமல் உள்ளது. உதாரணமாக Education Scholarship, Ontario விலும் அமெரிக்க மாநிலங்களிலும் உதைபந்தாட்ட வீரர்களுக்கு Collegesஉம் University உம் பல வகைப்பட்ட மேற்படிப்பிற்கான புலமை பரிசுத் திட்டம் வழங்கப்படுகின்றது. இதுமட்டுமில்லாமல் உதைபந்தாட்ட வீரர்களுக்கு IBM, BELL CANADA, Insurance Companies போன்ற பல முன்னனி தொழில் நிறுவனங்கள் வேலை வாய்ப்பு வழங்குகின்றன. இங்கு எமது வீரர்களிலும் திறமை குறைந்த வேறு சமூகத்தவர்கள் இவ்வகையான வசதிகளை பயன்படுத்தும் போது எமது சமூகத்து வீரர்கள் பயன்படுத்த தவறிவிடுகிறார்கள்.

இவ் உதைபந்தாட்ட வீரர்களின் பின்னடைவுக்கு முக்கிய ஒரு காரணம் எமது சமுதாய அமைப்புகளும், போதிய பயிர்ச்சி இன்மையினையுமேயாகும். இவர்களுக்கு போதிய பயிர்ச்சி கொடுக்கப்பட்டு கனேடிய சமூகத்தில் இவர்களை நன்கு அறிமுகப்படுத்தப்படும் போது எமது வீரர்கள் நிட்சயமாக இனம் காணப்படுவார்கள். இவர்களின் திறமை இனம் காணப்படும்போது இவர்களின் எதிர்காலம் நிட்சயமாக பிரகாசமாகும்.

சங்கங்களே, அமைப்புகளே சற்று சிந்தியுங்கள்! எமக்குள் மட்டும் சுற்றுப்போட்டிகளையோ, விழாக்களையோ நடத்தி எவ்வித பிரயோசனமும் இல்லை. எமது வீரர்களின் திறமைகளை கனேடிய உலகு அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு sports ஒரு முக்கிய ஊடகமாகும். ஆகவே எமது இளைஞர்களை கவர கூடிய விளையாட்டு துறைமூலம் எம் இளைய சந்ததியின் உயர்விற்கு மாற்று சிந்தனைகள் வைக்கப்படுவதன் மூலமும், கல்வி அறிவு மூலமும், விளையாட்டு துறைமூலமும் வரும்காலத்தில் இவ் இளைய சந்ததியினரின் பின்னடைவுகளை முன்னடைவுகளாக மாற்ற ஒன்றாக பாடுபடுவோமாக!





ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer - கதிர்

☎: (416) 750-8118

2381 EGLINTON AV. E.

KENNEDY/ EGLINTON, SCARBOROUGH

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா


YARLCAN
STEAM CLEANING




உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

Tel: 724-9085
Pager : 600 -0335
Cell: 721-9709



KD FINANCIAL SERVICES
Vamadevan Jeyamohan (Jey)
(President)
Royal Bank Approved Third Party Referral Agent
VISA CARDS UPTO $5000
புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில்
கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும்
வேலை செய்யும் கடிதம் (Employment Letter)
உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்
Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net
தொடர்புகளுக்கு: weekdays - 5:30pm - 10:00 pm.

Nada Jeyadevan Financial Rep.
Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm


## உலக நாடுகள் வரிசையில் - பிறேசில்

(1ம் பக்க தொடர்ச்சி)

நினைவில் வரும் நாடு பிரேசில். பெலே என்ற சிறந்த உதைபந்தாட்ட விளையாட்டு வீரரைக் கொண்டுள்ள நாடும் இந்த நாடே.

தென் அமெரிக்காவில் அத்திலாந்திக் சமுத்திர கரையோரமாக உள்ள மிகப் பெரிய நாடு பிறேசில் ஆகும். "சில்லி" [Chile} 'ஈகுடோர் [Ecuador] ஆகிய இரு நாடுகளும் தவிர ஏனைய பத்து நாடுகளும் இதன் வடக்கு, மேற்கு, தெற்கு எல்லையாக உள்ளது. கிழக்கே அத்திலாந்திக் சமுத்திரம் எல்லையாக உள்ளது.

**பரப்பளவு:** 3,286,488 ச. மைல்

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர் - 90%

**மொத்த சனத்தொகை:** 150,794, 000 பேர் (1992ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி)

**தலைநகரம்:** பிறேசிலியா (நாட்டின் மத்தியில் உள்ளது)

**மொழி:** போத்துக்கல் (உத்தியோக மொழி) ஸ்பானிஷ், ஆங்கிலம், பிரெஞ்சு

**வாழும் இனத்தவர்கள்:** போத்துக்கேயர், இத்தாலியர், ஜேர்மன், ஜப்பான், கறுப்பினத்தவர்கள், கறுப்பின் கலப்பினத்தவர்கள்

**சுதந்திரம்:** செப்ரெம்பர் 7/1822ஆம் ஆண்டு போத்துக்கல் நாட்டின் ஆதக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றது.

மொத்தமாக 366 தினசரிப் பத்திரிகைகள் இங்கு வெளிவருகின்றது. இருபத்தியாறு மாநிலங்கள் உள்ள இந்நாட்டில், ஜனாதிபதி, உப. ஜனாதிபதி, மந்திரி சபை என நிர்வாகத்தின் நிறைவேற்று துறைகள் பிரிக்கப்பட்டுள்ளன. 1992ஆம் ஆண்டு இந்நாட்டின் வரலாற்றில் முதற் தடவை ஜனாதிபதி சில குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் பதவி இறக்கப்பட்டார். பதினாருறு வயதுக்கு மேற்பட்டோர் வாக்கு அளிக்கும் உரிமை இருந்தும், எழுபது வயதுடன் வாக்குரிமை வழங்கி உரிமை இல்லாமல் இந்நாட்டில் போகின்றது. பல இடதுசாரி கட்சிகளும், தொழிற் சங்கங்களும் நாட்டின் பொருளாதார திட்டங்களையும் கொள்கைகளையும் எதிர்த்து வருகின்றன.

சகல ஏனைய நாட்டவர்களும் விசா பெற்று செல்ல வேண்டிய இந்நாடு அதிகூடிய வெப்பமான நாடாக இருந்த போதிலும், தெற்கு பகுதி சில காலங்களில் சற்று குளிராக இருக்கும். நிலக்ரி சுரங்கங்கள் கிடைக்கும் இந்த நாட்டால் விவசாய பொருட்கள் முக்கியமாக கோப்பி உற்பத்தியில் பிரபல்யமான நாடு ஆகும். இங்கு பாய்ந்து ஓடும் "அமேசன் நதி" என்னும் பிரபலமான நீளமான நதி ஏனைய பல கிளை நதிகள் விவசாய உற்பத்திக்கு துணையாக உள்ளது.

*-மாலினி பஞ்சலிங்கம்*



## நான் வாழப்போகிறேன்

### சுவடு 50

-வீணை மைந்தன்

நடிப்புக் கலையின் ஆதார புருஷராக விளங்கிவரும் நடிகர் திலகத்ததைப்பற்றிய பல்வேறு பரிமாணங்களையும் பல்வேறு கோணங்களிலும் பலதரப்பட்ட கலைஞர்களின் பார்வைகளின் ஊடாக இதுவரை காலமும் பார்த்தும் படித்தும் பரவசம் கொண்டோம்.

ஆனால் தகுதி வாய்ந்த ஒரு விமர்சனப்பார்வையினூடாக பார்க்கவில்லையே என்ற குறை தெரிகிறது. விமர்சனங்களையே உரமாகக் கொண்டு சளைக்காமல் சாதனை புரிந்த நமது நடிகர் திலகம் அவர்களைப்பற்றி வெளிவந்த பல்வேறு விமர்கனங்களில் பிரபல பத்திரிகையான 'ஹிந்து'' (The Hindu International Edition)வில் தகுதி வாய்ந்த விமர்சகர் T.G. வைத்தியநாதன் அவர்களால் அக்டோபர் 15, 1994ம் ஆண்டு ஆங்கிலத்தில் எழுதப்பெற்று வெளிவந்த விமர்சனத்தை அப்படியே தமிழாக்கம் செய்து தருவதில் மகிழ்ச்சியடைகிறேன். திரு வைத்தியநாதன் அவர்களுடைய சில பார்வைகளுடன் நான் முரண்பட்டுக்கொண்டாலும் அவருடைய முழுமையான கருத்துக்களையும் அப்படியே இம்மியளவும் பிசகாது கீழே தருகின்றேன:

"Sivagi Ganesan Chevalier Extraordinaire'' என்ற தலைப்பின் கீழ் வெளியான விமர்சனக் கட்டுரை இது:

Vive la France வாழ்க பிரான்சு! பிரான்சு நாடு இரண்டாவது முறையும் செயல்பட்டுள்ளது. முன்னர் வங்காள தேசத்தின் சத்தயஜித்ரே. இப்போ இன்னும் தெற்குப் புறமாக வந்து சிவாஜி கணேசனுக்கு "செவாலியே'' எனும் பெருமைக்குரிய விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. நான் அறிந்த அளவிலே பிரான்ஸ் நாட்டின் அதிபர் "மிற்றசண்ட்'' அவர்கள் நேரடியாக வந்து பெருமைக்குரிய இயக்குநர் "சத்தியஜித் ரே'' அவர்கட்கு வழங்கிய விருதிலும் பார்க்க சிவாஜி பெற்ற விருது கூடிய கௌரவம் மிக்கது. இதய நோய் இரு முறைதாக்கி "வீண தசை'' யில் இருக்கும் சிவாஜிக்கு இத்தனை புகழ். சுத்தியஜித்ரேயும் கூட விருது பெற்ற பொழுது இதய நோயினால் அவதிப்பட்டவரே!


சிவாஜி பல தலைமுறையாக நடிப்பதற்காக ஒப்பனை போட்டாலும் அவர் பிறந்த பொன்னாடு அவர் புகழ் பாடத்தவறி விட்டது. காலம் சென்ற எம். ஜீ. ஆர் போன்ற தகுதி குறைந்தவர்கள் தேசிய மட்டத்தில் விருதுகள் பெற சிவாஜி அவர்கள் நிராகரிக்கப்பட்டு வந்துள்ளார். (பின்னர் காலங்கடந்து "தாதேசாகேப்பால்கே விருது'' வழங்கிக் கௌரவிக்கப் பெற்றமை பிந்திய செய்தியாகும்).

1971ல் எம்.ஜி.ஆர் ரிக்ஷாத் தொழிலாளியாக நடித்த "ரிக்ஷாக்காரன்'' படத்திற்கும் - வயதில் குறைந்த "திறமைசாலியான'' கமல்ஹசன் 1982ல் "மூன்றாம் பிறை"யில் நடித்ததிற்கும், 1987ல் "நாயகன்'' ஆக நடித்ததிற்கும், தேசிய மட்டத்தில் கௌரவம் பெற சிவாஜி தளர்ந்து (?) போய் புழுங்கிக் கொண்டிருந்தார்.

இறுதியில் பிச்சை போடுவது போல் இம்மாபெரும் நடிகனின் சிறந்த நடிப்பிற்காக "தேவர்மகன்'' திரைச்சித்திரத்தில் "தேவர்'' என்ற பார்த்திரத்திற்கு உயிருட்டடிமைக்காக "சிறந்த துணை நடிகர்'' என்ற தேசிய அங்கீகாரம் கிடைத்தபொழுது அதைப் பெருந்தன்மையுடன் வெறுத்தொதுக்கியதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. உண்மை என்ன வென்றால் சிவாஜி எந்தவொருபாத்திரத்தில் நடித்தாலும் அவரே முதன்மை பெறுவர். அவர் என்றுமே மற்றவர்கட்குத் துணைப்பாத்திரமாக நிற்கமாட்டார். மற்றவர்கள்தான் இவருக்குத் துணை நடிகா ஆவாாகள.

பிரான்ஸ் நாடு பெருமைப் படுத்தக்கூடிய அளவு துலங்கும் இந்த சிவாஜி யார்?
தென்னகத்துத் திரை உலகின் சரித்திரத்தை மீள்பார்வை செய்பவர் எவராயினும் அங்கு "சிவாஜியின் பொற்காலம்'' (the era of Sivagi Ganesan) என்ற வரலாற்றுப் பிரிவு ஒன்றினைக் காணாமல் இருக்க முடியாது. சிவாஜியின் காலத்திற்கு முன்னர் சிறந்த பாடக நடிகர்களான பி. யூ. சின்னப்பா - எம். எம் தண்டபாணி தேசிகரும், 1940ன் நடுப்பகுதியில் பிரசித்தமான கொலைவழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டமையால் நடிப்பிற்குத் திடீரென முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய "தியாக ராஜ பாகவதர்'' போன்றவர்கள் இருந்தனர்.

மிகவும் கஸ்டமான குடும்பச் சூழலில் பிறந்த சிவாஜி, சந்தர்ப்பவசத்தால் திடீரென நட்சத்திர அந்தஸ்துப் பெற முடிந்தது. நாடகம் ஒன்றிலே மாவீரன் சிவாஜியின் பாத்திரத்தை ஏற்று நடிக்க எம். ஜி. ஆர் மறுத்தமையால் அப்பணி சிவாஜிக்கு வந்தது.. ஈ. வே. ரா பெரியாரின் ஆசியுடன் சிவாஜி - கணேசனுடன் ஒட்டிக்கொள்ள வெறும் வி.சி கணேசன் "சிவாஜி கணேசன்'' ஆனார். அதன்பின்னர் என்றுமே அவருக்குப் பின்னடைவு ஏற்பட்டதேயில்லை. நட்சத்திர அந்தஸ்த்துக்காக அவருடன் போட்டியிட்ட ஏனைய நடிகர்களின் பெருமூச்சு மாத்திரம் இடையிடையே கேட்டது. சிவாஜியின் முதலாவது வெற்றிப்படமான "பராசக்தி'' யின் (1952) வெற்றியில் அதிர்டம் என்ற பெயருக்கே இடமில்லை. முழுக்க முழுக்கக் கடினமான உழைப்பு- நிறைவான நடிப்பு-! "கா - கா - கா'' என்று அவர் பாடியதைக் கேட்டவர்களோ, நீதிமன்ற விசாரணையின் போது தன் சகோதரிக்காக வக்காலத்து வாங்கிய "கிறுக்கண்ணா''வின் புயல் என வீசிய சொற்பெருக்கைப்பார்த்தவர்களோ சுலபத்தில் மறந்திருக்கமாட்டார்கள்.



மனோகரா

1954ல் வெளியான "மனோகராவில்'' இந்தப் புயல் பெரும் சூறாவளியாக மாறியதை பலரும் கண்டிருப்பார்கள். ஆனால் அந்த சிவாஜி என்றுமே என் இதயத்தில் இடம் பெறவில்லை. ("ஹிந்து'' திரு ரி. ஜி. வைத்தியநாதனின் விமர்சனம் அடுத்த இதழில் தொடரும் . . . .

-வீணை மைந்தன்-

# 21 ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?



-ராஜா சொக்கலிங்கம்- raja@systemsplus.net
Computer Consultant


பகுதி (6)
SOUND CARD

இந்த வாரம் sound card இனுடைய 20 ஆண்டுகளுக்கு முன் computer தனிமனித (personal computer) உபயோகத்திற்கு computer வரும் வேளையில் கறுப்பு வெள்ளையில் எழுத்துக்கள் தெரிந்ததே பெரிய விடயமாகத் கொண்டு உபயோகித்த காலம் அது. அதன் பின் அந்த கறுப்பு வெள்ளை கலராக மாறி மனிதனை கவர்ந்து இழுத்தது. அப்பொழுதெல்லாம் வண்ணக்கோலங்களின் வடிவத்தில் மயங்கி இருந்த மனிதன் அந்தக் கணணி தன்னிடத்தே ஒலி (sound) வடிவத்தில் ஏதும் சொல்லவில்லை என்று நினைக்க ஆரம்பித்தான். அதை ஒரு பேசக் கூடிய நண்பன் தன் வாயால் எதையும் பேசாமல், சைகையால் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு நட்பாக இருந்தால் அது எப்படி இருக்கும் அதுபோலத்தான் அன்றைய கணணி. பின்பு அந்த கணணியை ஒலிமூலம் தொடர்புகொள்ள ஆரம்பித்த பொழுதுதான் அதை multimedia என்று சொன்னோம்.

இந்த multimedia க்கு முக்கியமான பொருளாகிய sound card நமது கணணியில் எங்கு எப்படி இருக்கிறது என்பது பலர் அறிந்ததே. இதன் வாயிலாக நமது பேச்சு அல்லது ஒலி வடிவத்தை கணணியில் பதிவு செய்யவும் (ஒலி நாடா போல) பதிவு செய்யப்பட்ட ஒலியை கேட்கவும் மற்றும் ஒலித் தொடர்பு (telephone) கொள்ளவும். இதற்கு மேலாக இப்பொழுது internet வாயிலாக பாடல்கள் வானொலி நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் இந்த sound card தான் ஆதாரம்.

இவற்றில் முதலில் 8 bit என்று ஆரம்பித்த இந்த தொழில்நுட்பம் 16, 32, 64 128 bit என்று போய்க் கொண்டே இருக்கிறது. சாதாரண PCஇல் பயன்படும் இந்த sound card இல் பிரபலமான ஒன்றுதான் creative labs www. Soundblaster.com என்ற இந்த web page இற்கு சென்று ஒலியுடன் கூடிய உங்களிற்கான வரவேற்பை அனுபவியுங்கள். மேலதிக விபரங்களும் நவீன தொழில்நுட்பங்களும் இந்த இணை பக்கத்தில் உங்களுக்கு கிடைக்கும்.

இதே போலத்தான் பலவகைப்பட்ட கம்பனிகள் உள்ளன. Yamaha Diamond, Ess Technologies, Optic, S3, Soundpro, Trident, Zoltrix முதலியன அவற்றில் சில சிறந்த sound card மற்றும் நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு கணணியின் உதவியுடன் internet வாயிலாக உலகத்தில் பல பகுதிகளுக்கு Long distance charges இல்லாமல் பேசக் கூடிய வாய்ப்பு இப்பொழுது இருக்கின்றது. இந்த நேரத்தில் ஒரு சிறு குறிப்பை தர ஆசைப்படுகின்றேன் . Internet வாயிலாக phone செய்வதற்கு உங்களின் கணணியில் ஒரு நல்ல ஒரு sound card இருக்க வேண்டியது அவசியம் ஆனால் உங்களின் modem "voice modem" ஆக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்களிடம் இருக்கும் sound card, full duplex ஆக இருப்பது சாலச்சிறந்தது. இப்படி full duplex இல்லாவிட்டால் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் பயன்படுத்தும் walkie talky போல ஒருவர்தான் ஒரு நேரத்தில் பேச முடியும். இது போன்ற internet தொலைபேசி வசதிகள் www.mediaring.com,www.firetalk.com msnetmeeting, http:// messenger. Yahoo.com இவை போன்ற பலபல இணைப்பக்கத்தை நீங்கள் பார்க்கலாம்..



முன்பெல்லாம் ஒரு திரைப்படப்பாடலை கணணியில் பதிவு செய்து வைத்துக்கொள்ள மிக அதிக இடம் தேவைப்பட்டது. (Large space அப்போது எல்லாம் wave-file என்பதில் பதிவுசெய்யப்பட்டது. இப்பொழுது அதிலிருந்து மாற்றம் செய்து MP3-file மூலம் பதிவு செய்வதால் அதிக இடம் தேவை இல்லை. இப்பொழுதெல்லாம் internet வழியாக பல திரைப்படப்பாடல்களை கேட்கக்கூடியதாக அமைந்துள்ளது. www..Tamilmovies.com.songs.

வானொலி நிலையங்களுக்கு என்று ஒரு புதிய இணைப்பக்கம் வந்துள்ளது. www.broadcast.com/radio இந்தப்பகுதியில் பல துறைகள் சம்பந்தப்பட்ட வானொலி நிலையங்கள் உங்களுக்கு சேவை செய்யக் காத்துக்கொண்டு இருக்கின்றது.

www.bbc.co.uk/tamil

**Safety Truck**
**Training School Ltd.**

**Training & Trucking**
**Classes A, D & Z**
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.





தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்

**In Classes**
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)

**Tel: (416) 616-5979 / (905) 793-9546**
**250 Summerlea Road, Brampton, ON**

பூச்சிகளை அழிக்கவே முடியாதா?
**CITY PEST CONTROL**



* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* மூட்டைப்பூச்சிகள் * எறும்புகள்
போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.



* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்
*ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்*

* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.

* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.



**(416) 410-2786**
*7 நாட்களும் அழைக்கலாம*

**RAAJ WATCH WORK**




சகல விதமான மணிக்கூடுகளும் **(Watch & Clock)** குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.
NATHAN ☎: (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST , BRIMLY/ LAWRENCE (Close to Biway)

# விண்வெளி

சூரியக்குடும்பம்:- 29

தருபவர்:- கனி

சூரியக்குடும்பத்தில் இனி நாம் புதன் பற்றிப்பார்ப்போம். சூரியனுக்கு மிக அண்மையில் உள்ள கிரகம் - கோள் புதனாகும். இது சூரியனின் முதலாவது பாறை உலகம் எனக் கூறப்படுகிறது. (இதன் அடிப்படையில் எமது பூமி மூன்றாவது பாறை உலகம் ஆகும்.) இருப்பினும் சில விஞ்ஞானிகள் - அறிவியலாளர்கள் சூரியனுக்கும் புதனுக்கும் இடையில் இன்னொரு பாறை உலகம் கூட இருக்கலாம் என ஐயுறுகிறார்கள். கண்டுபிடிக்கப்படாத அல்லது உறுதிப்படுத்தப்படாத அந்த கற்பனை உலகத்திற்கு "வல்கன்" (Volcan) எனப் பெயரிட்டு அதனைக் கண்டுபிடிக்கும் முயற்ச்சியில் கூட சில ஆய்வாளர்கள் ஈடுபட்டுக்கொண்டுள்ளார்கள். இவர்களின் ஐயத்திற்குக் காரணம் புதனின் ஒழுங்கற்ற இயக்கமாகும். புதன் சூரியனை வலம் வருகையில் ஒவ்வொரு சுற்றுகையின் போதும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தூரங்களில் சூரியனுக்கு அண்மையில் வருகிறது. இந்தத்தாறுமாறான இயக்கத்திற்கு, சூரியனுக்கும் புதனுக்கும் இடையில் கண்டுபிடிக்கப்படாத இன்னொரு கிரகம் இருப்பதே காரணம் என்பது இவர்களது கூற்று. அயன்ரைனின் கால-நேரப் பரிமானக் கொள்கை இந்த ஒழுங்கற்ற இயக்கத்திற்கு பொருத்தமான விளக்கத்தைக் கொடுத்த போதும் இவ் ஐயம் இருந்தவாறே உள்ளது.




சூரியக்குடும்பத்தின் இரண்டாவது சிறிய கிரகமாகிய புதன் எமது பூமியின் விட்டத்தின் 30% மான விட்டத்தையே கொண்டுள்ளது. சூரியனில் இருந்து சராசரியாக 5.79 x 10^7 km தூரத்தில் வலம் வரும் புதனின் சுமாராக 3.31 x 10^23 kg மிகவும் சிறியதான புதனின் திணிவு புதனுக்கு ஒரு வளிமண்டலத்தைப்பேணப் போதியதாக இல்லாததால் புதனைச்சுற்றி வளி மண்டலம் ஏதும் இல்லை. (சந்திரன் போன்றே) இருப்பினும் சூரியனுக்கு மிக அண்மையில் இருப்பதனால் சூரியக் காற்றினால் சில வாயுமூலக்கூறுகளை புதன் தனது மேற்பரப்பில் கொண்டிருக்கும். வளிமண்டலம் ஏதும் இல்லாததினால் சூரியனின் ஒளி நேரடியாகப்படும் இடத்தின் வெப்பநிலை சுமார் 800° F ஆகவும் இருண்ட பகுதியின் வெப்பநிலை - 280° F ஆகவும் காணப்படும்.


எமது பூமியின் நேரக்கணக்குப்படி புதன் சூரியனை ஒருமுறை வலம்வருவதற்கு சுமாராக 87.9 நாட்கள் எடுக்கும். அதாவது புதனின் ஒருவருடம் என்பது பூமியின் 87.9 நாட்கள் ஆகும். புதன் ஒருதடவை தன்னைத்தானே சுற்றுவதற்கு 58.6 நாட்கள் எடுக்கும். அதாவது புதனின் ஒரு நாள் என்பது பூமியின் 58.6 நாட்களாகும்.

புதன் சூரியனுக்கு மிக அண்மையில் இருப்பதனால் பூமியில் இருந்து புதனை அவதானிப்பது, ஆய்வுசெய்வது என்பது மிகவும் கடினமாக இருந்தது. 1974 - 75ம் ஆண்டுகளில் "மரீனர் 10" விண்கலம் புதனை அண்மித்து அதன் படங்களை அனுப்பி ஆய்வு செய்யும் வரை புதனைப்பற்றி நாம் தெரிந்து கொண்டது மிகமிகச் சொற்பமே.

ஏறக்குறைய சந்திரனின் மேற்பரப்புப்போலவே காணப்பட்ட புதனின் மேற்பரப்பில் சந்திரனில் காணப்படாத சில அம்சம்களும் காணப்பட்டன. சந்திரனில் உள்ளது போல் அல்லாது சில உயரமான செங்குத்தான வெட்டுப்பாறைகளை புதனின் மேற்பரப்பு கொண்டுள்ளது.

மீண்டும் அடுத்த சூரியக்குடும்பத்தில் சூரியனின் இரண்டாவது பாறை உலகமாகிய வெள்ளிபற்றி அறிவியல் நோக்கிப் பார்ப்போம்.

T. S. AUTO
SPECIALIST TOYOTA HONDA
MOTOR VEHICLE SPECIALISTS
FOR COMPLETE AUTO WORKS AND DETAILING




உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்

- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing

TUNE - UP •
BRAKES •
GENERAL MAINTENANCE •
ELECTRICAL WORKS •
ALL KIND OF REPAIRS •

OIL & FILTER CHANGE WITH CASTROL GTX




Call: Kumar
Tel: (416) 293-3395 (416) 891-2893
2305 Markham Road #24, Scarborough, Ont. M1B 2W3

ELECTRICAL REPAIRS
உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள்
றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த
செலவிலும்,சிறந்த முறையிலும்
குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ் - ☎ 261-6883

நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்
செறன்டிப்
(F) பிறஸ் மார்க்கட்
நாளாந்த பாவனைக்கு தேவையான சகல பொருட்களையும் நாளாந்தம் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
SERENDIB FRESH MARKET
Tel: (416) 269-9913
2631 Eglinton Ave. East, Scarborough, Ont. M1K 2S2

# காலம்: மார்ச் மாதம் 28ந் திகதிமுதல் ஏப்ரல் மாதம் 23ந் திகதி வரை

## மலிவு விலையில் மாபெரும் சாதனைபடைத்த

# மஞ்சுளா பஷன்

தனது 8வது ஆண்டுநிறைவு விழாவையும். 9வது ஆண்டு பிறந்ததின விழாவையும் முன்னிட்டு கனடா மாநகரம் இதுவரை கண்டிராத

# மாபெரும் மலிவு விற்பனை

இந்த மலிவு விற்பனையில்............

| | | | |
|---|---|---|---|
| லைனிங் துணி **89¢** முதல் 5 நாட்கள் மட்டும் | சாறிபிளவுஸ் துணி தரமானது 2 X 2 **$ 4.99** தொடக்கம் | கறிக்கிண்ணம் 24 துண்டுகள் **$49.99** மட்டுமே | England Skirt & Blouse **$39.99** மட்டுமே |
| சிறுமியருக்கான அழகிய பஞ்சாபி சூட் **$ 8.99** தொடக்கம் | சிறுமியருக்கான Lenka Suit Nagma Suit **$18.99** தொடக்கம் | சோபா கவர் **$19.99** மட்டுமே | கறிசமைக்கும் சட்டி 8 துண்டுகள் **$49.99** மட்டுமே |
| பனாரிஸ் சேலைகள் **$89.99** தொடக்கம் | Half சாறி Set **$18.99** தொடக்கம் | சாரம் தைத்தது **$ 5.99** மட்டுமே | England Men Shirt **$19.99** மட்டுமே |
| 50 விளக்குத் திரி **49 cents** மட்டுமே | நைலெக்ஸ் ஜோஜெட் சாறிகள் **$ 8.99** மட்டுமே | கோலம் றங்கோலி அபூர்வா **$74.99** தொடக்கம் | சாப்பாட்டுக் கோப்பை **$ 1.49** மட்டுமே |

| | |
|---|---|
| 6 நைலெக்ஸ் சாறி வாங்கினால் ஒரு நைலெக்ஸ் சாறி **இலவசம்** | 1 கோலம் சாறி வாங்கினால் ஒரு பிளவுஸ் **இலவசம்** |
| 1 காஞ்சிபுரம் சாறி வாங்கினால் ஒரு செனோறிரா பிறசியர் **இலவசம்** | 1 படையப்பா சூட் வாங்கினால் 1 சோடி பான்சி சூட் **இலவசம்** |
| 3 கொட்டன் வேட்டி வாங்கினால் 1 வேட்டி **இலவசம்** | 100 கனடியன் டொலர்களுக்கு சில்வர் பொருட்கள் வாங்கினால் 6 சில்வர் பேணி **இலவசம்** |
| 1 ஜீ.எம். சாறி வாங்கினால் ஒரு சாறம் **இலவசம்** | 1000 டொலர்களுக்கு மேல் கொள்முதல் செய்தால் ஒரு சன்யோ குக்கர் **இலவசம்** |
| 10 England சேட் வாங்கினால் 1 சேட் **இலவசம்** | |

50% கழிவு விலையில் பற்றிக்கவுண், இமிரேஷன், நகைகள், இங்கிலாந்தில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட Men's Shirt, பெண்களுக்கான Skirt & Blouse, Dresses, Boy's Suit சகல வயதினருக்குமுரிய உடுப்பு வகைகள், மற்றும் எண்ணிலடங்காப் பொருட்கள் மலிவு விலையில்

ஒறிஜினல் காஞ்சிபுரம், படையப்பா காஞ்சிபுரம் 2000 ஆண்டுக்குரிய Postal Design சாறி வகைகள் நம்பமுடியாத மலிவு விலையில

# Manchulaa Fashion

**5635, FINCH AVE. EAST UNIT 3**
**SCARBOROUGH, ON M1B 5K9**

**TEL: (416) 297-9875**

"மலிவின் மறுபெயர் மஞ்சுளா பஷன்"

# infoTamils Online

**தொழில்நுட்ப வளர்ச்சியின் காலத்திற்கேற்ப உங்கள் வர்த்தக நிறுவனங்கள் பற்றிய விபரங்களை *internet* ல் இலவசமாக விளம்பரம் செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.**


## www.infotamils.com

If you are a business-owner wishing to attract that special Tamil market, take the opportunity NOW to advertise with infoTamils Online. Need help moving your company into the exciting and profitable world of Internet marketing?


Contact infoTamils Online Today!
http://www.infotamils.com
Toll free: 1 888-257-2891
e-mail : info@infotamils.com


# ROYAL JASMINE FURNITURE


* சகலவிதமான தளபாடங்களிற்கும் ஒரே இடம்.
* உங்கள் எண்ணம் போல தளபாடங்கள் செய்து தரப்படும்.



உற்பத்திச்சாலையிலிருந்து நேரடி விநியோகம்.





**2408 EGLINTON AVE. EAST,TORONTO.**

தொடர்புகளிற்கு: (416)-285-8829

# ரசம்மாவின் ராஜ்யம்

## நகைச்சுவைத் தொடர் (18)

*-கலகலப்பு தீசன்-*

☺சிரிக்க 😐சிந்திக்க

ஆரிச்சந்திரன் அகதிநிலை கோரலாமா?
உண்மையையும் உள்ளதையும் நடந்ததையும், இழப்பையும் சொல்லி
அகதிநிலை நிராகரிக்கப்பட்டவர் எத்தனை பேர்?



**ஏப்பிரல் 01 முட்டாள்கள் தினம்
இந்த ஒரு நாளைத்தன்னும் ஞாபகத்தில்
வைத்திருக்காத எத்தனை முட்டாள்கள் உலகில்
உண்டு**

ரெலிபோன் அடிக்குமேல் அடித்தது
யேஸ் உலகர்
ஓ . . . கிட்டத்தட்ட ஒப்பேறின மாதிரித்தான்

ஓ . . . ஓ
என்று உலகர் கதைக்க . . . ராசம்மாவின் கழுத்து, கட்டியிருக்கும் ஆடு தூரத்தில் உள்ள புல்லை மேய துடிப்பது போலிருந்தது.

ரூபன் . . ரூபி விடயம் சர்வதேச லெவலில் பரவ தொடங்கிவிட்டது

**ஏப்படி?**

